இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 26-07-2024

# உயர்வுக்கு அடித்தளம் இட்டது யார்?

மின் கட்டணத்தை உயர்த்தி விட்டதாகச் சொல்லி ஆர்ப்பாட்டம் நடத்தி இருக்கிறது அ.தி.மு.க. அப்படி ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு தார்மீக அருகதை இருக்கிறதா அ.தி.மு.க.வுக்கு?

“தற்போதைய மின் கட்டண உயர்வுக்கு முந்தைய அ.தி.மு.க. அரசே முழுக் காரணம்” என்று நிதி மற்றும் மின் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் சொல்லி இருப்பதுதான் முழு உண்மை ஆகும். ஒன்றிய அரசு திணித்த ‘உதய் மின் திட்டத்தில்’ அன்றைய அ.தி.மு.க. அரசு இணையாமல் இருந்திருந்தால் இதுபோன்ற கட்டுப்பாட்டுக்குள் நாம் சிக்கி இருக்க மாட்டோம்.

2016 சட்டசபைத் தேர்தலில் பா.ஜ.க. தனித்துப் போட்டியிட்டபோது அந்தக் கட்சிக்கு ஆதரவாக, தமிழ்நாட்டில் பிரச்சாரம் செய்ய வந்தார் அன்றைய ஒன்றிய எரிசக்தித் துறை அமைச்சர் பியூஷ் கோயல். அப்போது கமலாலயத்தில் பியூஷ் கோயல் அளித்த பேட்டி முக்கியத்துவம் வாய்ந்தது. ஒன்றிய அரசின் உதய் மின் திட்டத்தை, அன்றைக்கு முதல்வராக இருந்த ஜெயலலிதா கடுமையாக எதிர்த்தார். அந்தத் திட்டத்தில் தமிழ்நாட்டையும் சேர்ப்பதற்காக, எரிசக்தித் துறை அமைச்சரான பியூஷ் கோயல், தொடர்ந்து போராடிக் கொண்டிருந்தார். ஆனால், ஜெயலலிதா அவரையோ, மோடி அரசையோ கொஞ்சம்கூட சட்டை செய்யவில்லை. அந்தக் கோபத்தை பத்திரிகையாளர் சந்திப்பில் காட்டினார் பியூஷ் கோயல்.

“இந்திய மாநிலங்களிலேயே தனி மாநிலமாக, தமிழ்நாடு இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்தியாவிலேயே மத்திய அரசு, அடைய முடியாத மாநிலம் என்றால், அது தமிழ்நாடுதான். தமிழ்நாட்டு முதலமைச்சரைச் சந்திக்க முடியவில்லை. அந்தக் கட்சியைச் சேர்ந்த தலைவர்களிடம் பலமுறை பேச முயன்றேன். எந்தப் பலனும் இல்லை. இந்தியாவின் 28 மாநிலங்களில் என்னால் சகஜமாகப் பேச முடியும். ஆனால், தமிழகத்தில் மின்துறை அமைச்சர் எல்லா விஷயத்தையும் கேட்டுவிட்டு, ‘அம்மாவிடம் கேட்டுச் சொல்கிறேன்’ என்கிறார். அ.தி.மு.க. கட்சி எம்.பி.க்கள் யாரும் நாடாளுமன்றத்தில் வாயைக்கூட திறக்க முடியாது. சென்னையில் எழுதித்தரப்பட்ட உரையைத்தான் அவர்கள் அப்படியே படிப்பார்கள்” என ஜெயலலிதாவையும், அ.தி.மு.க.வையும் விளாசித் தள்ளினார் பியூஷ் கோயல். அவருடைய பேட்டியை தமிழில் டப் செய்து தமிழக பா.ஜ.க. வெளியிட்டிருந்தது. அந்த வீடியோ இன்னும் சமூக வலை தளங்களில் உள்ளது.

உடனே கொதித்துப் போய் அன்றைய நிதி அமைச்சர் பன்னீர்செல்வமும் மின் துறை அமைச்சர் நத்தம் விசுவநாதனும் பியூஷ் கோயலுக்கு எதிராக கண்டன அறிக்கை வெளியிட்டார்கள். “நீ அவலைக் கொண்டு வா, நான் உமியைக் கொண்டு வருகிறேன் என்பது போலத்தான் இருக்கிறது ‘உதய்’ மின் திட்டம்” என நத்தம் விசுவநாதன் சீறினார். “மத்திய அரசால் கொண்டு வரப்பட்டுள்ள ‘உதய்’ திட்டம் தமிழக அரசுக்கும், தமிழக மக்களுக்கும் உண்மையிலேயே நன்மை பயக்கக்கூடிய திட்டம் இல்லை” என்றார்.

அன்றைய அமைச்சர் ஓ.பன்னீர்செல்வமோ, “அரசியல் ஆதாயம் தேட பியூஸ் கோயல் விஷமப் பிரச்சாரம் செய்கிறார்” என்றார். இப்படி ஜெயலலிதா இருந்த போது ‘உதய்’ மின் திட்டத்தை எதிர்த்தவர்கள்தான், ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு ஆதரித்தார்கள்.

பன்னீர்செல்வமும் பழனிசாமியும் பா.ஜ.க.வின் பாதம் தாங்கிகளாக மாறி, ‘உதய்’ மின் திட்டத்தில் கையெழுத்துப் போட்டார்கள். எந்த பியூஷ் கோயலுக்காக அன்று தலைவிக்காக வாள் சுழற்றினார்களோ, அதே பியூஸ் கோயலிடம் 2019 நாடாளுமன்றத் தேர்தலில் கூட்டணிப் பேச்சுவார்த்தை நடத்திய கட்சிதான் அ.தி.மு.க.

2015 நவம்பரில் ‘உதய்’ மின் திட்டம் செயல்பாட்டுக்கு வருகிறது. ஆனால், தமிழ்நாடு மட்டும் திட்டத்தில் இணையவில்லை. சுமார் 22,400 கோடி ரூபாய் அளவிற்கு தமிழகத்திற்கு சேமிப்பு தரக்கூடும் என்று பா.ஜ.க. அரசு தேன் தடவிய நாவில் பேசியது. ஆனால், அன்றைக்கு முதல்வராக இருந்த ஜெயலலிதா ஏற்கவில்லை. ‘உதய்’ மின் திட்டத்தினால் ஏற்படும் பாதிப்புகளை தி.மு.க. எடுத்துரைத்தது.

**ஜெயலலிதா ஏற்க மறுத்த திட்டத்தை அன்றைய அ.தி.மு.க. பொறுப்பு முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் ஏற்றுக் கொண்டார். ஜெயலலிதா அப்போலோவில் இருந்த நேரத்தில் அவர் மீண்டு(ம்) வரமாட்டார் என்ற எண்ணத்தில் 2016 அக்டோபர் 21 - அன்று அன்றைய பொறுப்பு முதல்வர் பன்னீர்செல்வம் ஏற்றுக் கொண்டார். 2017 ஜனவரி 9 ஆம் தேதி ‘உதய்’ திட்டத்தில் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க. அரசு இணைந்தது.**

**எந்த பியூஸ் கோயலை எதிர்த்தார்களோ, அந்த எரிசக்தித் துறை அமைச்சர் பியூஷ் கோயல் தலைமையில் தமிழ்நாடு மின்சாரத் துறை அமைச்சர் தங்கமணி முன்னிலையில் புதுடெல்லியில் இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. அப்படியானால் இன்றைய மின் கட்டண மாற்றங்களுக்கு அ.தி.மு.க. தானே காரணம்?**

**ஆண்டுதோறும் மின் கட்டண உயர்வைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்த வேண்டிய உத்தரவாதத்தை அளித்தது பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க. அரசுதான். அப்படியானால் இன்றைய மின் கட்டண மாற்றங்களுக்கு அ.தி.மு.க.தானே காரணம்?**

**இதை எல்லாம் மக்கள் மறந்திருப்பார்கள் என்ற வகையில் தான் திசைதிருப்பல் போராட்டங்களை நடத்துகிறது அ.தி.மு.க.**

தமிழ்நாடு, மேற்குவங்க மாநிலங்களைத் தொடர்ந்து

## கர்நாடகா சட்டப்பேரவையிலும் ‘நீட்’ தேர்வுக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றம்!

பெங்களூரு, ஜூலை 26- மருத்துவப் படிப்பில் மாணவர் சேர்க்கைக்கு நடத்தப்படும் நீட் நுழைவுத் தேர்வில் இருந்து விலக்கு அளிக்குமாறு தமிழ்நாடு சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில், இந்தாண்டு நடந்த நீட் நுழைவுத் தேர்வில் வினாத்தாள் கசிவு, ஊழல் என அடுக்கடுக்கான முறைகேடுகள் நடந்தன. வசதிப் படைத்தவர்கள் மட்டுமே நீட் தேர்வில் வெற்றிபெற முடியும் என நிலை இருப்பதாக மாணவர்கள் குற்றம் சாட்டினர்.

நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தி இந்தியா கூட்டணி ஆளும் மாநிலங்கள் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்றும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியிருந்தார்.

இதனிடையே, மேற்கு வங்க மாநிலத்தில் நீட் தேர்வுக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நிலையில், கர்நாடகா சட்டப்பேரவையிலும் நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நீட் தேர்வை முழுமையாக ரத்து செய்துவிட்டு, பழைய முறைப்படி மருத்துவ மாணவர் சேர்க்கையை நடத்த வேண்டும் என்று கர்நாடக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.7.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டில் புதிய தொழில் முதலீடுகள் மேற்கொள்வது குறித்து ஆலோசனை மேற்கொள்வற்காக வருகை தந்த ஐக்கிய அமீரகத்தின் வர்த்தகத் துறை அமைச்சர் அப்துல்லா பின் தௌக் அல்மரி (His Excellency Thiru. Abdulla bin Touq Al Marri) அவர்களை பொன்னாடை அணிவித்து வரவேற்றார்.

ஆஸ்திரேலியா - மெல்போர்ன் பல்கலைக் கழகத்தில்

## வேளாண் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆய்வு!

### பல்துறை வல்லுநர்களுடன் கலந்துரையாடல்!

சென்னை, ஜூலை 26 - வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையிலான குழு ஆஸ்திரேலியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு அரசு முறை பயணம் மேற்கொண்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கேற்ப வேளாண்மை - உழவர் நலத் துறையின் சார்பாக மேற்கொள்ள வேண்டிய மேம்பாட்டு பணிகள் தொடர்பான ஆய்வுகள், தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் தொழில் நுட்பங்களை பயன்படுத்துவதில் முன் னேற்றத்தை ஏற்படுத்துவது போன்ற பணிகளுக்காக வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையிலான குழு ஆஸ்திரேலியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு அரசு முறை பயணமாக சென்றுள்ளது.

இக்குழுவில் வேளாண்மை உழவர் நலத்துறையின் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மை செயலாளர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் உடன் சென்றனர்.

இப்பயணத்தின் முதற் கட்டமாக நேற்று முன்தினம் 24.07.2024 ஆஸ்திரேலியாவில் உள்ள மெல்பர்ன் பல்கலைக்கழகத்தில் பல்துறை வல்லுநர்களுடன் கலந்துரையாடல் மற்றும் தொழில் நுட்ப பங்குகள் தொடர்பான கருத்து பரிமாற்றங்கள் வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது.

இந்த கலந்துரையாடலில் காலநிலை மாற்றம், புதிய வகை பயிரினங்கள் அறிமுகம், வேளாண்மை - உழவர் நலத்துறையில் புதிய தொழில் நுட்பங்களை பயன்படுத்துவது, மண்வளம் காப்பதற்கான நடவடிக்கை, பூச்சி நோய் தாக்குதலில் இருந்து பயிர்களைக் காப்பது, உயர் தொழில்நுட்ப வேளாண்மை முறைகளைத் தீவிரப்படுத்துவது, தோட்டக்கலை பயிர்களான பழ வகைப்பயிர்கள் மற்றும் மருத்துவ பயிர்களை கையாளுதல், அனைத்து வகை பயிர்களிலும் அறுவடைக்கு பின்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய வழிகாட்டு முறைகள், உணவு வகைப் பயிர்களில் புதுமையை ஏற்படுத்துதல், தொழில்நுட்ப மேம்பாட்டிற்கான பயிற்சியை மேம்படுத்துதல், வேளாண்மைப் பாடங்கள் பயிலும் மாணவர்களின் திறமைகளை மேம்படுத்துதல் போன்றவை விவாதிக்கப்பட்டன.

வேளாண்மைத் தொழிலில் அரசு/துறை தொடர்பாக, மேற்கொள்ளப்பட்ட கருத்து பரி மாற்றங்களை முதலமைச்சர் அவர்களின் ஆணையைப் பெற்று தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்படும்.

சிவகங்கை மாவட்டத்தில் ரூபாய் 24.50 கோடியில்

## மூன்று ஆண்டுகளில் அறநிலையத் துறையின் வளர்ச்சிப் பணிகள்!

### அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் பேச்சு!

சிவகங்கை, ஜூலை 26- சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் இந்து சமய அறநிலையத் துறை சார்பில் அருள்மிகு கொப்புடைய நாயகி அம்மன் கோயில் நிர்வாகத்தின்கீழ் உள்ள வாரச்சந்தைக் கான 90 புதிய கட்டிடங்கள் ரூபாய் ஒரு கோடியே 50 லட்சத்தில் கட்டப்பட்டுள்ளது. தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் சென்னையிலிருந்து காணொலி காட்சி மூலம்இந்த வாரசந்தை கட்டிடத்தினை திறந்து வைத்தார்.



இந்த நிகழ்ச்சியில் பங்கேற்று கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் பேசியதாவது. முதல்வர் தளபதி அவர்கள் பதவி ஏற்ற 3 ஆண்டுகளில் அனைத்து துறைகளின் சார்பில் பல்வேறு வளர்ச்சி பணிகள் நடைபெற்று வருகின்றது. ஒன்றிய அரசு போல் முதல்வர் பாரபட்சம் பார்ப்பதில்லை. தமிழக முதல்வர் அவர்கள் அனைத்து மாவட்டங்களும் சீரான வளர்ச்சி அடைய வேண்டும் என்ற எண்ணத்தில் பல்வேறு திட்டங்களை செயல் படுத்தி வருகிறார். அந்த திட்டங்கள் முழு அளவில் நடைபெற்று அதன் பயன்கள் மக்களுக்கு போய் சேர வேண்டும் என்று விரும்புகிறார். சிவகங்கை மாவட்டத்தில் மூன்றாண்டுகளில் இந்து சமய அறநிலையத் துறை சார்பில் ரூபாய் 24.41 லட்சத்தில் பணிகள் நடைபெற்று வருகிறது. இதில் 114 பணிகளில் 51 பணிகள் முழுமையாக முடிவடைந்து மக்கள் பயன்பாட்டிற்கு வந்துள்ளது. மீதி உள்ள 63 பணிகள் நடைபெற்று வருகின்றது. விரைவில் அப்பணிகள். முடிவடையும். இதேபோல் அறநிலையத் துறை சார்பில் தமிழகம் முழுவதும் ஏராளமான கோவில் ஆக்கிரமிப்பு இடங்கள் மீட்கப்பட்டுள்ளது. பல்லாயிரக் கணக்கான கோவில்கள் குடமுழுக்கு நடைபெற்று உள்ளது. காரைக்குடி வளர்ந்து வரும் கல்வி நகரமாகும். தற்போது தமிழக முதல்வர் அவர்களால் மாநகராட்சியாக அறிவிக்கப்பட்டுள்ளது. இங்கு வாரச்சந்தை ஒரு கோடியே 50 லட்சத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ளது.

மேலும் பல புதிய கட்டடங்கள் இங்கு கட்ட வாய்ப்புள்ளது. இந்த வார சந்தை கட்டிடத்தில் அனைத்து வசதிகளும் செய்து தரப்பட வேண்டும். அதற்கான பணிகளை அறநிலையத் துறை அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும். இதற்கான மாஸ்டர் பிளான் தயாரித்து அரசிற்கு அனுப்பிட வேண்டும். முதல்வர் தலைமையிலான அரசு பல்வேறு வளர்ச்சி பணிகளை நடத்தி வருகிறது என்பதற்கு இது ஒரு சான்றாகும். மக்களின் கோரிக்கைகளை இந்த அரசு ஏற்று அதனை முழுமையாக நிறைவேற்றி வருகிறது. இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசினார்.

முன்னதாக அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித் உட்பட பல முக்கிய பிரமு கர்கள் குத்துவிளக்கு ஏற்றினார்கள். நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித் தலைமை வகித்தார். இந்த நிகழ்ச்சியில் எஸ்.மாங்குடி எம்.எல்.ஏ. காரைக்குடி நகர் மன்ற தலைவர் எஸ்.முத்துதுரை, மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் திருமதி புவனேஸ்வரி இளங்கோவன், ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள்.

முன்னதாக இந்து சமய அறநிலைத் துறை இணை ஆணையர் பழனி குமார் வரவேற்றுப் பேசினார். நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், காரைக்குடி நகர்மன்ற துணைத்தலைவர் என். குணசேகரன், தேவகோட்டை கோட்டாட்சியர் எஸ்.பால்ராஜ், வட்டாட்சியர் ராஜா, மாவட்ட கவுன்சிலர் நாகனிசெந்தில் குமார், தேவகோட்டை நகர்கழக செயலாளர் பெரி. பாலா, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கொத்தமங்கலம் சேது, நகர் மன்ற உறுப்பினர்கள் தனம் சிங்கமுத்து, மலர்வழி பழனி அப்பன், திவ்யா சக்தி, சொ. கண்ணன், ஒன்றிய ஒன்றிய செயலாளர் நா.நெடுஞ்செழியன்,ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார், சேவியர், ஓட்டுனர் ரமேஷ், சிதம்பரம் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார் தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர், காளிமுத்து, அயலக அணி சன்சீமான்சுப்பையா, வர்த்தக அணி ருக்மா சரவணன் உட்பட அதிகாரிகள், பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

தமிழ்நாட்டில் - இராணிப்பேட்டையில்

## 9 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் வாகன உற்பத்தி!

### 5 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது!

இராணிப்பேட்டை, ஜூலை 25 - முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசின் பல்வேறு நடவடிக்கைகளால், தமிழ்நாட்டில் முதலீடு செய்ய முன்னணி நிறுவனங்கள் பலவும் ஆர்வம் காட்டி வருகின்றன.

இந்நிலையில், ராணிப்பேட்டை மாவட்டத்தில் டாடா மோட்டார்ஸ் நிறுவனத்தின் வாகன உற்பத்தி தொழிற்சாலை அமையவுள்ளதாக தொழில்துறை அதிகாரிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

அடுத்த 5 ஆண்டுகளில், 9 ஆயிரம் கோடி முதலீட்டில் 5 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் வாகன உற்பத்தி தொழிற்சாலை அமைக்கப்பட உள்ளது. இந்த தொழிற்சாலையில் ஜாகுவார், லேண்ட் ரோவர் கார்களை தயாரிக்க டாடா நிறுவனம் திட்டமிட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க அரசு முறைப் பயணமாக ஆஸ்திரேலியா நாட்டிற்குச் சென்றுள்ள வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், டாஸ் மேனியா மாகாணத்தில் உள்ள ஹோபார்ட் நகரில் அமைந்துள்ள தாவரவியல் பூங்காவைப் பார்வையிட்டு அங்கு தாவரங்கள் பராமரிக்கப்படும் தொழில்நுட்ப முறைகள் பூங்கா அமைக்கப்பட்டுள்ள விதங்கள் மற்றும் பராமரிப்பு விதங்களைப் பார்வையிட்டார். உடன் தமிழ்நாடு அரசின் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா உள்ளார்.